
பேசும்படம்
REGD. No. M. 4523
மார்ச் 1965 ◇ 75 காசு
N.A.T. யின்
வீரமைந்தன்
மாதேஸ்வரா பிக்சர்ஸ் தயாரிப்பு


பசும்படம்
1965 ◇ 75 காசு
புரட்சிநடிகர்
எம்·ஜி·ஆ
நடிக்கும்
பத்மினிபிக்சர்ஸ்
ஆயிரத்தில் ஒருவன்
ஈஸ்ட்மென் கலர்
தயாரிப்பு & டைரக்ஷன் பி.ஆர்.பந்துலு


பேசும் படம்
ஜனவரி 1965 • 75 காசு
சுதர்சனம் பிக்சர்ஸ்
ஹல்லோ
மிஸ்டர்
ஜமீன்தார்
தயாரிப்பு & டைரக்ஷன்: K.J. மகாதேவன்





படித்து வந்தபோதே நடனத்தில் எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. என் தாயார் சந்தியா பிரபல நடிகை. பள்ளியைப் போலவே கண்டிப்புடனும் அன்புடனும் வளர்த்து வருபவர் அவர்.


அவர் என் ஆவலை யறிந்து, நடனப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினர். ஒரு நாள் கான்வென்டிலிருந்து திரும்பியதும், 'நடன ஆசிரியை' என்று, திருமதி கே. ஜே. சரஸாவை எனக்கு அறிமுகப் படுத்தினர். சம்பிரதாயப்படி அவரை வணங்கி நடனப் பயிற்சியை ஆரம்பித்தேன்.

அறிவதற்கு மிக எளிதான முறையில் அவர் எனக்கு நடனம் சொல்லிக் கொடுத்தார். அவர் சொல்லிக் கொடுப்பதை நான் சரிவரச் செய்யும் வரை விடமாட்டார். நானும் அவர் கோபிக்கும்படியோ அலுத்துக் கொள்ளும்படியோ நடந்து கொள்ள மாட்டேன்.

சுமார் ஐந்து வருஷங்கள் திருமதி சரஸாவிடம் முறையாக நடனம் பயின்றேன்.

அவரது விருப்பமும் அனுமதியும் கிடைத்த பின், அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்தார் என் தாயார். அன்று, நடனக் கலையில் அனுபவமுள்ளவரும், உலகிலே சிறந்த நடிகர் என்று பாராட்டப்படுபவருமான 'நடிகர் திலகம்' என் நடனத்தைக் கண்டு பாராட்டிப் புகழ்ந்து பேசியபோது நான் மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்துப் போனேன். அன்று வந்திருந்தவர்கள் எல்லோருமே பாராட்டி ஆசி கூறினார்கள். வீடு திரும்பியதும் முதல் காரியமாக என் அம்மா எனக்குத் திருஷ்டி கழித்தார்கள்!

நான் வளர்ந்ததும், என் தாயாரைப்போல், நான் சினிமாவில் நடித்துப் புகழ் பெற







லாம் என்று பலர் கூறினார்கள். இப்படிப் பலர் கூறிய போது, என் உள்ளத்திலும் நடிகையாகலாம் என்ற எண்ணம் துளிர் விட்டது. ஆனால் படிப்பை முடித்த பிறகுதான் எதுவும் என்று என் தாயார் யாவரிடமும் கூறியதால், நான் என் ஆசையை வெளியிடவே இல்லை.

கன்னடப் படத்தில் என் தாயார் நடிக்க வேண்டும் என்று கேட்டு வந்த தயாரிப்பாளர்கள், எனக்கேற்ற பாத்திரமும் இருப்பதாகக் கூறி, என்னை நடிக்க அனுமதிக்கும்படி என் தாயிடம் கேட்டார்கள். அவர் என்னைப் பார்த்தார். நான் தலையைக் குனிந்து கொண்டேன்.

விரைவில் அவரிடம் நடிக்க அனுமதி கிடைத்து விட்டது. நான் கன்னட நடிகையானேன். தமிழ்ப் படங்களில் நடித்துப் புகழ் பெற வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது.

நக்ஷத்திரங்களைத் தயாரிக்கும்





யில் நான் நடித்தேன். டைரக்டர் ஸ்ரீதர் பாராட்டினார். தற்போது பத்மினி பிக்சர்ஸாரின் 'ஆயிரத்தில் ஒருவன்'

வர்ணப் படத்திலும் எம். ஜி ராமச்சந்திரனுடன் நடித்து வருகிறேன். இது தவி தெலுங்கு, கன்னடப் படங்கள்



க்ஷத்திர டைரக்டர் ஸ்ரீதர், வெண்ணிற ஆடை" படத்ற்காக என்னைத் தேர்ந்தெடுத்தபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தமிழில் அது முதல் படம். அதுவும் வர்ணப்படம். வைகை அணைக்கட்டில் பாடல் காட்சி



# ஜெயலலிதாவும் அன்புத் தாயும்

லும் நடித்து வருகிறேன். புதுமுகம் தேவை என்று விரும்பும் ரசிகப் பெருமக்களுக்கும் புதியவர்களைத் துணிந்து அறிமுகப்படுத்தும் தயாரிப்பாளர், டைரக்டர்களுக்கும் நான் ஏமாற்றம் தரமாட்டேன். நன்கு நடித்து யாவரது பாராட்டையும் பெறமுடியும் என்ற தன்னம்பிக்கை எனக்குண்டு.

★

இயற்கை வர்ணப் படங்கள் : பாசு



ஸ்ரீவள்ளி, சீமான் பெற்ற செல்வங்கள் முதலிய படங்களி
நடித்திருக்கும் வத்ஸலா.

இயற்கை வர்ணப் படங்கள்: 'பா



தமிழ்த் திரைப் படவுலகின் சிறந்த குணசித்திர நடிகைகளுள் சௌகார் ஜானகியும் ஒருவர். இவர் தற்போது பல படங்களில் நடித்து வருகிருர்.



ராஜலக்ஷ்மி புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் 'அபிமன்யு' படத்தில் கிருஷ்ணனுக நடித்து வருகிருர் ஜெமினி கணேசன்.



'அபிமன்யு' படத்தில் அபிமன்யுவாக நடித்து வருகிருர் ஏ.வி.எம். ராஜன். இவர் நடிக்கும் முதல் புராணப் படம் இது.



ஹாஸ்ய பாகங்களில் நடித்து வரும் புஷ்பமாலாவுக்கு இப்போது
படவுலகில் நல்ல ஆதரவு கிடைத்து வருகிறது.



சுதர்சனம் பிக்சர்ஸ் 'ஹல்லோ மிஸ்டர் ஜமீன்தார்' படத்தில் ஜெமினி கணேசனுடன் ஜோடியாக வருகிறார் சாவித்திரி.



'ஹல்லோ மிஸ்டர் ஜமீன்தார்' படத்தில் இந்திரா தேவி, நடிக
வேள் எம். ஆர். ராதாவின் காதலியாக நடித்துள்ளார்.



[illegible] மிஸ்டர் ஜமீன்தார்' மூலம் அறிமுகமாக விருக்கும்
[illegible] இவர். பெயர் மல்லிகா.



சௌகார் ஜானகி
படம்: பாசு



## ராதா

…கிறார்

பெங்களூரிலிருந்து சென்னை வந்த நானும் எனது தாய் மாமனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். படங்களில் நடிக்கவேண்டும் என்ற ஆவலோடு-உண்மையை ஒப்புக் கொள்ளுகிறேன்-வெறியோடு நான் சென்னைக்குக் கிளம்ப முடிவு செய்தபோது, துணைக்கு என் தாய் மாமனும் வந்தார்.

இருவரும் சென்னை சேர்ந்ததும் திருதிரு வென்று விழித்தோம். ஆனாலும்



வந்தவரை வாழவைக்கும் தமிழகம் நம்மைக் கைவிடாது என்று தேற்றிக் கொண்டோம்.

"பேசும் படம்"!

புது முகங்களைத் தக்க முறையில் அறிமுகப்படுத்தி வைக்கும் அதன் மூலம் ஏவி. எம். ஸ்டூடியோவுக்குள்ளே நுழைந்தேன். என்னிடம் திறமை இருக்கிறது; சந்தர்ப்பம் கிடைத்தால் திறமையை வெளிப்படுத்திப் புகழ்பெற முடியும் என்ற தன்னம்பிக்கையோடு சென்றேன்.



முருகன் பிரதர்ஸ் "நானும் ஒரு பெண்" படத்தில் சிறு பாத்திரம் கொடுத்தார்கள். வாழ வழிகாட்டினார்கள் என்றே மனப்பூர்வமாகக் கூறுகிறேன்.

அடுத்து தேவர் பிலிம்ஸ் 'நீதிக்குப்பின் பாசம்' படத்தில் எம். ஜி. ஆர். அவர்களின்



முறைப் பெண்ணுக நடித்தேன். மக்கள் திலகமும் தேவரும் உற்சாக மூட்டியதன் காரணமாக, ரசிகர்களுக்கு அறிமுக மானேன். பிறகு 'பச்சை விளக்கு' முதலிய படங்களில் சிறு சிறு பாத்திரங்களில் நடித்தேன்.



படிப்படியாக நான் ஆதரவு பெற்றுத் தான் வருகிறேன். இந்த மனத் திருப்தி தான், எனக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருக்கிறது. இது என் படவுலக வாழ்வை ஸ்திரப்படுத்தும் என்று நம்புகிறேன்.



## குமாரி சரஸ்வதி

பேபி சச்சுவாகப் புகுந்து குமாரி சரஸ்வதியாக கதாநாயகி பாத்திரம் ஏற்ற இந்த நடன நடி, ஹாஸ்யப் பாத்திரங்களிலும் சோபிக்க முடியும் என்று நிரூபித்திருக்கிறார்.



**மணிமாலா**

'பெரிய இடத்துப் பெண்' படத்தின் மூலம் அறிமுகமான மணிமாலா, திறமையின் மூலம் படிப்படியாக முன்னேறி தற்போது கதாநாயகியாக நடித்து வருகிறார்.



## காஞ்சனா

விமானத்திலிருந்து படவுலகில் குதித்த நடிகை காஞ்சனா, முதல் படத்திலேயே புகழ்பெற்று தற்போது முக்கிய பாத்திரங்களேற்று நடித்து வருகிறார். புகைப்படங்கள் : பாசு


மலர் 1965 • 75 காசு
சக்தி புரொடக்ஷன்ஸ்
ஞாயிறும்
திங்களும்
கதை-வசனம்
பாடல்கள்
வலம்புரி சோமநாதன் • கவிஞர் கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன் • ராமமூர்த்தி
டைரக்ஷன் R. சடகோபன்




அனுபவமும் நடிப்புத் திறமையும் கொண்ட பானுமதி தமிழ்ப் பட ரசிகர்களின் இதயத்தில் என்றென்றும் வீற்றிருப்பவர்.



விமானப்பணிப் பெண்ணாக இருந்த ஆஷா, 'வெண்ணிற ஆடை' மூலம் வெள்ளித் திரைக்கு வந்திருக்கிறார்.



ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை' வர்ணப்படம் அறிமுகப் படுத்த விருக்கும் மற்ெருரு புதுமுகம் இவர் - பெயர் நிர்மலா



இரவும் பகலும்' அறிமுகப்படுத்திய ஜெய்சங்கர், இப்போது அரை டஜன் படங்களில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.



சந்திரகாந்தா

குணசித்திர நடிகையாகப் பாராட்டு பெற்ற சந்திரகாந்தா கவர்ச்சிப் பாத்திரங்களிலும் புகழ்பெற விரும்புகிருர் போலும்!



நிர்மலா

ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை' படத்தின் மூலம் படவுலகில் இடம் பெற்றிருக்கும் இந்த இளம் நடிக்கு நல்ல எதிர் காலமிருக்கிறது.



ரேவதி

முருகன் பிரதர்ஸ் தயாரிப்பான ''காக்கும் கரங்கள்'' படத்தின் மூலம் இவர் தமிழ்ப் படரசிகர்களுக்கு அறிமுகமாகிறார்.



சாந்தா

'சர்வர் சுந்தரம்' அறிமுகப்படுத்திய இந்த நாட்டிய நடி, முக்கிய பாகத்திலும் நடிக்கக்கூடிய திறமைசாலி.




காஞ்சனா

'காதலிக்க நேரமில்லை' வர்ணப்படம் தந்த புகழ், இவரைப் பல படங்களில் தற்போது நடிக்கச் செய்திருக்கிறது.




குமாரி சரஸ்வதி

எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்கக்கூடிய இந்த நடன நடி தற்போது பல படங்களில் நடித்து வருகிறார்.



மனோரமா

ஹாஸ்ய நடிகைகளில் தன்னிகரற்று விளங்கும் இவர், தற்போது ஏராளமான படங்களில் நடித்து வருகிறார்.




ஸ்ரீகாந்த்

நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்ற இவர் ''வெண்ணிற ஆடை'' படத்தின்மூலம் கதாநாயகனுக அறிமுகமாகிருர்.



சும்படம்
ஜூன் 1965 — 75 காசு
தேவரி
தண்டாயுதபாணி பிலிம்
அளிக்
தாயும் மகளுப்
கதை தயாரிப்பு
டைரக்
சாண்டோ M.M.A.சின்னப்பாதேவர் ◆ M.A.திருமுக



சந்திரகாந்தா

நக்ஷத்திர ஆல்பம்


'ஸ்நானம செய்து விட்டு, இப்படி ஒரு குடிலின் முன்பு படுத்து கூந்தலைக் காய வைப்பதில் ஒரு தனி ஆனந்த மிருக்கத்தான் செய்கிறது!' என்கிருர் சந்திரகாந்தா.



கூந்தலை அள்ளி முடிச்சுப் போட்டுக் கொள்ளுவதிலும் ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது!



இந்தக் கொண்டை போட்டுக் கொள்ளாத பெண்களை நாம இப்போதெல்லாம் பார்க்கவே முடியாதே!



'கொஞ்சம் இருங்கள்! காற்றினிலே வரும் கீதத்தை கொஞ்சம் ரசித்துவிட்டு வருகிறேன்' என்கிருர் பாடகி காந்தா.



ஆபரணங்கள் அதிகமில்லாவிட்டால் அதுவே இந்தக் காலப் பெண்களுக்குக் கவர்ச்சியூட்டுகிறது.



விஜயகுமாரி

தேர்ந்த நடிப்புத்திறனால் ரசிகர்களைக் கவர்ந்து விட்ட நடிகைகளில் குறிப்பிடத்தக்கவர் இவர்.



**ரத்னா**

இளமைத் துடிப்பு கொண்ட ரத்னா 'தொழிலாளி' தந்த புகழ் காரணமாக ,பல படங்களில் நடித்து வருகிறார்.



ராஜ சுலோசனு

காலத்துக்கேற்ற உடை அணியும் நாகரீக நங்கை என்று இவரைக் குறிப்பிடத் தோன்றுகிறதல்லவா?